படும்போது, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேருகிறவர்கள் போக பாக்கி இடங்கள் காலியாக இருப்பவை பற்றி ஒரு லிஸ்ட் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களும் வெற்று இடங்களாக வரும்போது, அவைகளும் அறிவிக்கப்படும்.

**(இ) கல்லூரிகளில் " ராகிங் " நடப்பதைத் தடுத்தல்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மற்றொரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அதாவது, குறிப்பாக பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் " ராகிங் " அல்லது எள்ளி நகையாடுவது என்பது கவலைக்கு இடம் அளிக்கிறது என்று உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அது பற்றி ஒரு சுற்றறிக்கையும் 4—7—1967-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சினியரிங் மற்ற கல்லூரிகளில் அதற்கு இடமளிக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இளைய மாணவர்களை, புதிதாக வரும்போது, மூத்த மாணவர்கள் கேலி செய்யும் பழக்கம், கேலி, கிண்டலாக இல்லாமல், எள்ளி நகையாடி, அழவைத்து, துன்புறுத்துவதாகச் சென்றுவிட்டால் அதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவையில், ஒரு மாணவன் மன உளைச்சல் தாங்காமல் தூக்குப் போட்டுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டது பற்றிச் சொல்லப்பட்டது. போலீஸார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக கோவை கல்லூரியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பி.ஈ. டெக்னிக்கல் இறுதி ஆண்டு படிப்பவர்கள் 2 பேரையும், இரண்டாவது ஆண்டில் படிக்கும் மாணவர்கள் 2 பேரையும் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். எள்ளி நகையாடும் பணியில் 11 மாணவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அப்படி சென்னை " இஞ்ஜினியரிங் " கல்லூரியில் 3 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மதுரை மருத்துவக் கல்லூரியில் 3 பேர்களை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கடுமையான சுற்றறிக்கைகளை எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்புவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கைகள் எடுக்கலாம், வெளியேற்றலாம் என்று உத்தரவுகள் இடப்பட்டுள்ளன. இனி மிக ஜாக்கிரதையாக இருக்கும்படி விடுதிக் காப்பாளர்கள், கல்லூரி முதல்வர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாணவர்கள், வெளியேற்றப்பட்ட மாணவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முதல்வர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**5. அரசினர் தீர்மானம்.**

**விதி 41 (3) நிறுத்தி வைக்கப்படுதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து கவன ஈர்ப்பு அறிவிக்கைகள். இன்று 10 அறிவிக்கைகள் உள்ளன. ஆனால் விதிகளின்படி ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்பு அறிவிக்கைகளுக்கு மேல் எடுத்துக் கொள்ள முடியாது. ஆகையால் 41-வது விதி 3-வது உட்பிரிவைத் தளர்த்த வேண்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் :** அவைத் தலைவரவர்களே 41—வது விதி 3—வது பிரிவின்படி ஒரு நாளைக்கு 2 அறிக்கைகள தெரிவிக்கலாம் என்று உள்ளது. அதை 244—ஆம் விதியின்படி இன்று தளர்த்த வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவ** அந்த விதியைத் தளர்த்த பேரவை ஒருமனதுடன் அனுமதிக்கிறது. எனக் கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**6. கவன ஈர்ப்பு.**

**(அ) கோவை பஞ்சாலைகள் கதவடைப்பு**

**திரு. சு. துரைசாமி :** கோவை மாவட்டத்தில் உள்ள கம்போடியா, சனுர்த்தன, ரங்கவிலாஸ், சோமசுந்தரா, காளிஸ்வரா, மற்றும் சில மில்கள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையின்றி அவதியுற்று அவர்கள் குடும்